24 ஜூன் 2018

Newbec

NEW WAY OF BEING CHURCH

திருமுழுக்கு யோவான் பிறப்பு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

**மாதாந்திர கருப்பொருள்:**

# எடுத்து, பிட்டு, கிறிஸ்துவில் அளித்து

# அற்புதமான படைப்பு

கடவுள், தமது மகனின் வருகைக்காக ஒவ்வொரு நொடியையும் துல்லிதமாக திட்டமிட்டார். உலகத்தின் மீது அன்பு கூர்ந்ததால், தமது ஒரே மகனையும் அளிக்க மனமுவந்தார். அவருக்கு முன் வழிகாட்டியை அனுப்பவும் கடவுள் திட்டமிட்டார் அவரது மகனின் வருகையை முன்னுரைத்தார், எலிசபெத் மகன்



திருமுழுக்கு யோவான். மக்கள் பரந்து விரிந்து அங்குமிங்குமாக வாழ்ந்ததால், செய்தி சொல்ல ஆள் தேவைபட்டது. இயேசு அதிசய மனிதன் வருவதற்கு முன், பாதையைத் தயாரிக்க வேண்டியது முக்கியமாகும். பிறப்பிலிருந்தே யோவானின் வாழ்வு குறித்து மக்களிடையே ஆர்வம் இருந்தது. காரணம், யோவானின் தந்தை வாய் பேச முடியாத சகாரியா, தமது மகனின் பெயரை எழுதி காட்டினார், உடனே பேச்சு வந்தது. வித்தியாசமான யோவானை மக்கள் கவனிக்கத் தொடங்கினர்.

இயேசுவின் வருகைக்கு மாறுபாடாக, அவரது வருகை பற்றி, ஆபிரகாம், யாகோப்பு, பின்னர் தாவீது காலத்திலும் முன்னறிவிக்கப்பட்டது. கடவுளின் பணியை நிறைவு செய்தார் இயேசு, கடவுள் அவரது மாட்சியை வெளிப்படுத்தினார். ஏசாயா கூறுவது தெளிவாகும், ‘உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்’. வல்லமைமிக்க கடவுள் அனைத்தையும் அதனதன் செயல்பாட்டிற்கேற்ப இயங்குவது, உண்மையில் அற்புதமே.

நமது வாழ்க்கை எவ்வாறு? ஆகாயத்திலிருந்து நாம் குதிக்கவில்லை. யோவானையும் இயேசுவையும் படைத்த கடவுள், நம்மையும் படைத்திருக்கிறார். தாய் வயிற்றில் கரு உருவாகும் முன்னமே, அவர் நம்மை அறிந்திருந்தார். அவர் எப்போதும் செயல்படுகிறார், அவரது சுமை எளிது என்பதால் அனைத்தையும் அவர் எளிமையாக்குகிறார். அவரது பணி என்னவென்று யோவானுக்குத் தெரியும். வழியை ஆயத்தப்படுத்து, அவர் கூறினார், ‘குனிந்து அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை’. இயேசுவிற்கும் தெரியும் தாம் யாரென்று.

நாம் யார்? நாம் யார், நமது பணி என்ன, எதற்காக அழைக்கப்பட்டோம் என்பது தெரியுமா? இவை பற்றி இன்னும் அறியாதிருந்தால், யோசிக்காமல் இருந்தால், திருப்பாடலில்(139) வரும் இந்த வார்த்தைகளை மீண்டும் சொல்லிப் பாருங்கள், ‘வியத்தகு முறையில் நீர் என்னைப் படைத்ததால், நான் உமக்கு நன்றி நவில்கின்றேன்’. இவ்வாறு செய்யும் போது அனைத்தையும் கடவுளின் கையில் நாம் ஒப்படைக்கின்றோம். யோவானை புனிதமாக்கியது அதே கை, இயேசுவை நமது அரசராகவும் சகோதரராகவும் ஆக்கியது அதே கை, அதே கைதான் உன்னையும் என்னையும் உருவாக்கியது. ✝

நீ என்னவாக வேண்டுமோ அவ்வாறே ஆகினால், இந்த உலகமே உன்னில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்!

- புனித சியானா கத்தேரின்

**வாரம் ஒரு வசனம்**

யோவானையும் இயேசுவையும் படைத்த கடவுள், நம்மையும் படைத்திருக்கிறார்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 25/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அண்ட்ரூ கூய்


*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 ஜூன் (ஆனி) மாதத்தின் கருப்பொருள்:*
***எடுத்து, பிட்டு கிறிஸ்துவில் கொடுங்கள்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**<u>பங்கு அலுவலக நேரம்</u>**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: திருமுழுக்கு யோவானின் பிறப்பு - பொதுக்காலம் 12ஆம் ஞாயிறு சனி 23 -06-2018 - ஞாயிறு 01-07-2018**

எசாயா: 49: 1-6 திபா: 138: 1-3, 13-14ab, 14c-15 தி.ப: 13: 22 -26 லூக்: 1: 57 - 66, 80

**“வியத்தகு முறையில் என்னைப் படைத்ததால், நான் உமக்கு நன்றி நவில்கின்றேன்” - திபா 138**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 23 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/<br>திருப்பலி (பு. அல்பேர்ட் / பு. மார்கரெட்) | |
| ஞாயிறு | 24 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (பு.மொனிக்கா)<br>திருப்பலி (ஆ) (புனித ஹிலாரி 2)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி)<br>மாலை 6.00 கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது**<br><br>**மார்ஜெரி திரு இருதய ஆண்டவர் சிற்றாலய திருவிழா :** காலை 10.00 மணிக்கு செபமாலையும் தொடர்ந்து திருவிழா திருப்பலியும் |
| திங்கள் | 25 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 26 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 27 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.45 மணி அ.தி.ச ஒருங்கிணைப்பு குழு ஒன்றுகூடல் (BECCOT)*** |
| வியா | 28 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 29 | 7.00 மா | திருப்பலி | ***தொடர்ந்து மறைதிரு அன்ட்ரு கூய் அவர்களுக்கு பிரியாவிடை விருந்துபசரிப் நிகழ்வு நடைபெறும்*** |

**<u>திருமுழுக்கு யோவானின் பிறப்பு</u> <u>பொதுக்காலம் 13ஆம் ஞாயிறு</u>**

சா.ஞா: 1: 13-15; 2: 23-24 தி.பா: 29: 2, 4, 5-6, 11-12a, 13b 2 கொரி: 8: 7-9, 13-15 மாற்கு: 5: 21 - 43

**“ஆண்டவரே, உம்மை ஏந்திப் புகழ்வேன். ஏனெனில் என்னைக் கைதூக்கிவிட்டீர்” - திபா 29**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 30 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித அல்பேர்ட் / புனித பவுல்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 01 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (பு.மொனிக்கா)<br>திருப்பலி (ஆ) (புனித யோசப் கப்புசீன்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15 |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2018 ஜூன்(ஆனி) மாத செய்திகள்/நிகழ்வுகள்**

(1)16/17 ஜூன் 2018 ரிம: 7961.70

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**(2) ஜூன் 23/24 இன்றைய திருப்பலிகளின் காணிக்கை தேசிய நிதிக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.**

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்:**
அ) கொலனியம்மா அந்தோணிமுத்து (இறப்பு: 16-6-18
ஆ) பிரான்சிஸ் அந்தோனி பிரான்சிஸ் (இறப்பு: 21-6-18
**முடிவில்லா ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!**

- **<u>எஸ்.பி.எம். விவிலிய பாடம்:</u>** படிவம் 3 மறைக்கல்வி மாணவர்களை இதில் கலந்துகொள்ளுமாறு அழைக்கிறோம். (சனிக்கிழமை பகல் 2.30) தற்போது படிவம் 4 & 5 மாணவர்களுக்கு நடத்தப்படுகிறது. தொடர்புக்கு: ஹெல்டன் (012-237 0982)
- **<u>திருமணம் புரிய இருப்போரின் கவனத்திற்கு</u>**:படிவத்தில் உங்களுடைய விவரங்களை முதலில் பதிவு செய்தபின் பங்கு குருவானவரைச் சந்தியுங்கள். (குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன்னர்) கடைசி நேர திட்டமிடலை தவிருங்கள்.
- **<u>VSPF - நடனத்துடன் கூடிய விருந்து</u>** (25-08-2018-சனி) டிக்கெட்டுகள் தொடர்புக்கு: மரியதாஸ் 06-7612 777) மார்ஜி (018-395 0546)
- **<u>எஸ்.பி.எம்</u>** விவிலிய ஆசிரியர்கள் . ஜூன் 10 ஆம் தேதி நடைபெற்ற காலை உணவுவிற்பனைக்கு ஆதரவு அளித்த பங்கு மக்களுக்கு தங்களுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்
- **<u>மாமறை மாவட்ட திருவழிபாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் திருவழிபாடு, திருமணத் தயாரிப்பிற்கான உருவாக்கப் பயிற்சி</u>** நடைபெறுகிறது. நாள்: ஜூன் 30 காலை 9.00 - 4.00 வரை இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம். கட்டணம்: ரிம: 10.00. வழங்குபவர்: அருள்பணி: சிரில் மன்னாயகம் (மலாக்கா ஜோகூர் மறைமாவட்டம்)

இன்று திருப்பலியை வழிநடத்திய அதிச வினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

- **<u>அருள்திரு. அண்ட்ரூ கூய்</u>** அவர்கள் மினவுதல் தேவாலயத்தில் உதவி பங்கு தந்தையாக 2016 முதல் நமக்காகப் பணிபுரிந்துள்ளார். 1, ஜூலை 2018 முதல் காஜாங் திருக்குடும்ப தேவாலயத்தின் பங்கு தந்தையாகப் பணி செய்யவிருக்கிறார். அவருக்கு நம்முடைய இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வோம்.

  **29-06-2018 (வெள்ளி) மாலை 7.00 மணிக்கு திருப்பலியும் *தொடர்ந்து மறைதிரு அன்ட்ரு கூய் அவர்களுக்கு பிரியாவிடை விருந்துபசரிப்பு நிகழ்வு நடைபெறும்***
- **170 ஆம் ஆண்டு வரலாற்று நினைவுப் புத்தகம் மற்றும் ஒளிவட்டு: “கார்னர் ஸ்டோன் காஃபி டேபிள்”** உங்களுடைய பிரதியை பெற்றுக்கொள்ள தொடர்புக்கு: ஜெரோம்- 019-790 8071 - அல்லது பங்கு அலுவலகத்தை நாடவும். “ஹரி ராயா” விடுமுறையை ஒட்டி சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதற்கு வருந்துகிறோம். விரைவில் புத்தகம் உங்கள் கரங்களில் தவழும். **நன்றி.(170 ஆம் ஆண்டு விழா புத்தக குழு)**
- **<u>உறுதிப்பூசுதல் அருளடையாளக் கொண்டாட்டம்</u>**: ஜூலை 21,2018(சனிக்கிழமை) மாலை 6.00 மணி. அனைத்து உறுதிபூசுதல் மாணவர்களும் அதிச/பங்கு பணிக்குழுக்களில் இணைந்து பணி செய்ய அழைக்கிறோம். கடந்த உறுதிபூசுதல் முகாமில் உதவி செய்த மறைக்கல்வி ஆசிரியர்கள்/பெற்றோர்கள் அனைவருக்கும் நமது நன்றிகள் உரித்தாகுக! அருள்திரு. ஜோர்ஜ் அவர்கள் மாணவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து உரையாடுவார்.
- **<u>தேசிய நிதிதிரட்டு</u>**: மினவுதல் தேவாலயத்தின் 23/24 ஆகிய திருப்பலிகளின் காணிக்கை கோலாலம்பூர் மாமறை மாவட்ட நிதி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன்பின் அந்த தொகை நாட்டின் தேசிய நிதி அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும்.
- **<u>விசேச கையேடு</u>**: ஒருங்கிணைந்த எட்டு பணிக்குழுக்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய கையேட்டை மாமறை மாவட்டம் வெளியிட்டுள்ளது. அதிச மற்றும் பணிக்குழு பொறுப்பாளர்கள் உங்களுடைய பிரதியை பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்புக்கு: ஜோன் மெய்னார்ட் ( BECAT)
- **<u>வீடுகளில் இருக்கும் நோயாளிகளுக்காக:</u>** அதிச க்களில் வீடுகளில் இருக்கும் நோயாளிகளைப் பற்றி பங்கு அலுவலகத்திற்கோ அல்லது அதிச பொறுப்பாளர்களுக்கோ இது வரை தெரியப்படுத்தவில்லை என்றால் உடனடியாகத் தெரிவிக்கவும். கடைசி நேரம் வரை குருவானவருக்காகக் காத்திருக்க வேண்டாம். அதிச/சோன் மற்றும் நற்கருணைப் பணியாளர்கள் உங்கள் அருகாமையில் இருக்கும் நோயாளிகள் வாரம் தோறும் நற்கருணைப் பெற்றுக்கொள்ளுமாறு கவனித்துக் கொள்ளுங்கள்.
- **மாமறை மாவட்டத்தின் ஐந்தாண்டு திட்டத்தைப் பற்றிய உரை:** நாள்: ஜூன் 30, இடம்.APC,KL. அனுமதி இலவசம். அனைவரும் கலந்து கொள்ளலாம். தொடர்புக்கு: 03-2026 6466 / 03- 2022 0000. ஜூன் 28 க்குமுன் பதிந்து கொள்ளவும்.
- **2018/2019 ஆம் ஆண்டுக்கான முதியோர் புகுமுக கிறிஸ்துவவகுப்புகள்** ஜூலை 8 ஆம் தேதி தொடங்கவுள்ளது. நம் திருச்சபையின் மேல் ஆர்வமுள்ளவர்களை இந்த வகுப்பிற்குஅழைத்து வாருங்கள். தொடர்புக்கு: லியோ: 013- 3977 639 அல்லது பங்கு அலுவலகம்.

- **<u>22 -24 ஜூன் 2018: மார்ஜெரி திரு இருதய ஆண்டவர் திருவிழா</u>**
  - **<u>ஜூன் 22 (வெள்ளி)</u>** மாலை 7.00 செபமாலை/ஒப்புரவு/திருமணி ஆராதனை/கொடியேற்றம்/திருப்பலி/நோயில் பூசுதல்
  - **<u>ஜூன் 23 (சனி)</u>** மாலை 7.00 செபமாலை/ஒப்புரவு/திருப்பலி/திருச்சுற்றுப்பவனி
  - **<u>ஜூன் 24 (ஞாயிறு)</u>** காலை10.00செபமாலை/திருவிழா திருப்பலி
- **தேசிய மொழி அப்போஸ்தலப் பணிக்குழுவின்** புதிய பொறுப்பாளர்: அல்பர்ட் எசுலி
- **மலேசிய குருக்களின் விசேச பேரவை: ஜூலை 16-20 (திங்கள்-வெள்ளி) ஜோகூர் பாரு , மாஜோடி செண்டரில் நடைபெறும்.**